

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (5.3.2026) தலைமைச் செயலகத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா தேர்தல் நடத்தும் அலுவலரும், சட்டமன்றப் பேரவை கூடுதல் செயலாளருமான திருமதி இரா.சாந்தி அவர்களிடம் வேட்பு மனுவை தாக்கல் செய்தார். உடன், நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் பெ. சண்முகம், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.எஸ்.பாலாஜி ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (5.3.2026) தலைமைச் செயலகத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் பேராசிரியர் ஜே. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் அவர்கள் தேர்தல் நடத்தும் அலுவலரும், சட்டமன்றப் பேரவை கூடுதல் செயலாளருமான திருமதி இரா.சாந்தி அவர்களிடம் வேட்பு மனுவை தாக்கல் செய்தார். உடன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் மு. வீரபாண்டியன், சட்டப்பேரவை துணைத் தலைவர் கு. பிச்சாண்டி, நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (5.3.2026) தலைமைச் செயலகத்தில், அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் சார்பில், மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் எம். கிறிஸ்டோபர் திலக் தேர்தல் நடத்தும் அலுவலரும், சட்டமன்றப் பேரவை கூடுதல் செயலாளருமான திருமதி இரா.சாந்தி அவர்களிடம் வேட்பு மனுவை தாக்கல் செய்தார். உடன், தமிழ்நாடு மாநில காங்கிரஸ் மேலிடப் பொறுப்பாளர் கிரிஷ் ஜோடங்கர், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு.செல்வப்பெருந்தகை, மனிதநேய மக்கள் கட்சி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் எம்.எச். ஜவாஹிருல்லா ஆகியோர் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று முன்தினம் (5.3.2026) தலைமைச் செயலகத்தில், தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் சார்பில், மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் எல்.கே. சுதீஷ் தேர்தல் நடத்தும் அலுவலரும், சட்டமன்றப் பேரவை கூடுதல் செயலாளருமான திருமதி இரா.சாந்தி அவர்களிடம் வேட்பு மனுவை தாக்கல் செய்தார். உடன், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் பொதுச் செயலாளர் திருமதி பிரேமலதா விஜயகாந்த், சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் எஸ். ராஜேஷ்குமார் ஆகியோர் உள்ளனர்.



கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (5.3.2026) முகாம் அலுவலகத்தில், மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ள பேராசிரியர் ஜே. கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



கழக பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்களை, அவரது இல்லத்தில், மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் கழக வேட்பாளர்களில் ஒருவராக அறிவிக்கப்பட்டுள்ள, கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### ஜனநாயகத்தை காத்திடும் குரலாய்

# மாநிலங்களவையில் தொடர்ந்து ஒலிப்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

**சென்னை, மார்ச். 7-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**

ஜனநாயகத்தைக் காத்திடும் குரலாய் நாடாளுமன்ற மாநிலங்களவையில் தொடர்ந்து ஒலிப்போம்!

மக்களின் நம்பிக்கையைப் பெற்று, தமிழ்நாட்டில் புதிய வரலாறு படைத்துக் கொண்டிருக்கும் நமது கூட்டணி சார்பில், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திருச்சி சிவா மற்றும் பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், காங்கிரஸ் பேரியக்கத்தைச் சேர்ந்த கிறிஸ்டோபர் திலக், தே.மு.தி.க.வைச் சேர்ந்த எல்.கே. சுதீஷ் ஆகியோர் கூட்டணிக் கட்சியினருடன் மாநிலங்களவைக்கு வேட்பு மனு தாக்கல் செய்துள்ளனர்.

நமது அரசியல்சட்ட விழுமியங்களையும் இந்திய நாட்டின் ஒற்றுமைபன்மைத்துவம் ஆகியவற்றையும் பேணிக் காத்திடத் தொடர்ந்து பணியாற்றுவோம்!

இவ்வாறு கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.




மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் மயிலாடுதுறையில் சிக்னேச்சர் திருமண அரங்கில் நடைபெற்றது. கூட்டதில் மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க. செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., பேசினார். உடன் தலைமைச் செயற்கு குழு உறுப்பினர்கள் இராம. இளங்கோவன், ஜி.என்.ரவி, மாவட்டக் கழக நிர்வாகிகள் கே.ஜி. சீனிவாசன், மு.ஞானவேலன், எஸ்.செல்வமணி, அலெக்சாண்டர் மற்றும் பலர் உள்ளனர்.

### ஈடு இணையற்ற

# ஆற்றல் கொண்டவர் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

## ஜப்பான் – முனைவர் கணேஷ் பாராட்டு!

சென்னை, மார்ச் 7–

ஜப்பானில் முனைவர் கணேஷ் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களைப் பற்றி தமது சமூக வலைதளப் பக்கத்தில் குறிப்பிடுகையில் முதலாம் ராஜேந்திர சோழனின் வாழும் எடுத்துக்காட்டாகத் திகழ்கிறார் என்றும் ஆற்றல் வாய்ந்தவர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

முனைவர் கணேஷ் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:

மு.க.ஸ்டாலின் வெறும் அமைதியானவர், அமைதியானவர் மட்டுமல்ல. - அவரது தன்னம்பிக்கையும், ஆற்றலும் ஈடு இணையற்றவை. கலைஞர் உயிருடன் இருந்த போது மு.க.ஸ்டாலின் மிகவும் கீழ்ப்படிதலுள்ள மகனாக இருந்தார், அவர் தனது தந்தையை ஒருபோதும் மீறி நடக்கவில்லை.

இன்று, தனது தந்தை ராஜராஜ சோழனை ஒருபோதும் மறைக்காத ஒரு புத்திசாலித்தனமான மனம் கொண்ட முதலாம் ராஜேந்திர சோழனின் வாழும் எடுத்துக்காட்டாக மு.க. ஸ்டாலின் திகழ்கிறார்.




டெல்லி அரசியலில் மு.க.ஸ்டாலின் இன்னும் பல உயரங்களை அடைய வாழ்த்துகிறேன்.

இவ்வாறு அந்த ட்விட்டரில் தெரிவிக்கப் பட்டுள்ளது.